# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 046/மா/2018

ஆணை எண். 61/2018

நாள் : 21/03/2018

திரு பெ. முருகேசன்,
தஞ்சாவூர் – 613 205.

– முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.

– எதிர் மனுதாரர்

தஞ்சாவூர் மாநகராட்சி, மணக்கரம்பை, எண்.2/705, வடக்கு வெள்ளாளர் தெரு முகவரியில் வசிக்கும் திரு பெ. முருகேசன் அவர்களது 15.03.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 19.03.2018 அன்று பெறப்பட்டு, 046/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனுவினைப் பரிசீலித்து கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தஞ்சாவூர் மாநகராட்சி, மணக்கரம்பை, எண்.2/705, வடக்கு வெள்ளாளர் தெரு முகவரியில் வசிக்கும் திரு பெ. முருகேசன் என்பவர், இம்முறைமன்ற நடுவம் பிறப்பித்த 26.12.2017 நாளிட்ட ஆணை எண். 303/2017 முறையீட்டு மனுதாரருக்கு நிறைவு அளிக்காத நிலையில், 15.03.2018 நாளிட்ட சீராய்வு மனு ஒன்றினை இம்முறைமன்ற நடுவத்தில் தற்பொழுது தாக்கல் செய்துள்ளார். முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்த முறையீடு சம்பந்தப்பட்ட நேர்வில் பிறப்பிக்கப்பட்ட ஆணையினை மீண்டும் பரிசீலிக்கக் கோரும் சீராய்வு மனுவினை ஏற்பதற்கு, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் மற்றும் அச்சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளில் வழிவகை செய்யப்படவில்லை. எனவே, இம்முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்கப்பட்ட 26.12.2017 நாளிட்ட ஆணை எண்.303/2017 நிறைவற்றதாக உள்ளது என முறையீட்டு மனுதாரர் கருதினால் உரிய வகையில் மேல்முறையீடு செய்து கொள்ளுமாறு முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தி இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 21–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

1. திரு பெ. முருகேசன்,
 2/705, வடக்கு வெள்ளாளர் தெரு,
 மணக்கரம்பை,
 தஞ்சாவூர் – 613 205.

2. மாநகராட்சி ஆணையர்,
 தஞ்சாவூர் மாநகராட்சி,
 தஞ்சாவூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
 பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
 பேரூராட்சி பிரிவு –3,
 இ.கோ. / உதிரிகள்